இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

விஜய உதான மன்றம்
(கூட்டிணைத்தல்)

விஜய உதான மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன அவர்களால் 2017, யூன் மாதம் 21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது

(2017, மே மாதம் 22 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

[*187 ஆம் சட்டமூலம்*]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 11.00 **தபாற் செலவு : ரூபா 10.00**

விஜய உதான மன்றம்
(கூட்டிணைத்தல்)

விஜய உதான மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

"விஜய உதான மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இலங்கையில் இதற்குமுன்னால் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங் களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக் கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விஜய உதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம்.

விஜய உதான மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விஜய உதான மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாகவுள்ள அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகை யோரான அத்தனை ஆட்களும், (இதனகத்துப்பின்னர் "கூட்டுத் தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "விஜய உதான மன்றம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாதல் வேண்டும். அத்துடன்

அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் அது பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பொருளாதார, நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள மாணவர்களுக்கு உயர் கல்வியை பெற்றுக் கொள்வதற்காக தைரியமூட்டல், உதவி உபகாரமளித்தல், ஊக்கமளித்தல் மற்றும் குறைவருமானம் உள்ள மாணவர்களுக்கு அல்லது பெற்றோர்கள் இருவரை அல்லது அவர்களில் ஒருவரை இழந்துள்ள மாணவர்களுக்கு அல்லது அவ்வாறானதோர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள மாணவர்களுக்கு உயர் கல்வியை பெற்றுக்கொள்வதற்காக உதவியளித்தல் மற்றும் நடத்தையில் தைரியமூட்டல்;

(ஆ) குறை வருமானமுள்ள மாதர்களுக்காக சுயதொழிலுக்கான பயிற்சி, சுயதொழில் வழிமுறைகள், தொழில் நுட்ப உதவி மற்றும் மூலப்பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல்;

(இ) மனைப் பொருளாதாரத்தை உரமூட்டுவதற்காக சிறு மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகளுக்காக வழிகாட்டல்;

(ஈ) யுத்தம் காரணமாக இன்னல்களுக்கு ஆளாகியுள்ள சிறுவர்கள், மாதர்கள் மற்றும் பலவித அங்கவீனங்களுக்கு ஆளாகியுள்ளவர்களுக்காக நலனோம்பு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்;

(உ) மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக மத நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்;

(ஊ) இருதய சிகிச்சை, சிறுநீரக மாற்றுச் சிகிச்சை அல்லது புற்றுநோய் சிகிச்சை போன்ற சுகாதார பிரச்சினைகளினால் துன்பப்படுகின்ற ஏழை மக்களுக்கு அவ்வாறான சிகிச்சைத் தேவைகளுக்கு உதவுதல் மற்றும் வேறு நோய் நிவாரணங்களுக்காக உதவியளித்தல்;

(எ) அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றை அமைத்துக் கொண்டுநடாத்துதல், சமூக நலனோம்புகை நிலையங்களை அமைத்தல்;

(ஏ) செவிப்புலன், கட்புலனற்றோர், வாய்பேச முடியாதோர் மற்றும் வலது குறைந்தோர் ஆகியோருக்காக நலனோம்புகை வசதிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் அவர்களுக்கான விடுதிகளை அமைத்தல்;

(ஐ) நிர்க்கதியான, ஏழை மக்களுக்கு முச்சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் மற்றும் மூக்குக் கண்ணாடிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்தல்;

(ஒ) உறைவிடமற்ற மக்களுக்கு வீடமைத்தல் மற்றும் அம்மாதிரியான நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக உதவியளித்தல்;

(ஓ) மாவட்டத்திற்கு உரித்தான பாரம்பரிய கைத்தொழில் துறைகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து தீர்வினைப் பெற்றுக்கொடுத்தல், நவீன தொழில்நுட்பங்களையும் மூலப்பொருட்களையும் பெற்றுக் கொடுத்தல், (தோல், மட்பாண்டங்கள், கைப்பணிப்பொருட்கள் மற்றும் உருக்குத் தொழில்);

(ஔ) இயற்கை அழிவுகள், அனர்த்த முகாமைத்துவ நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் வளங்களைத் திரட்டுதல், உலர் உணவுகள், குளியலறை தளபாடங்கள் ஆகியவற்றை பகிர்ந்தளித்தல்;

(க) பாடசாலை மாணவர்களின் அறிவு, மனப்பாங்கு, திறமைகள் விருத்திக்காக பலவித நிகழ்ச்சிகளை அறி முகப்படுத்துதல், (உ-ம்: பயிற்சிப் பட்டறைகள், கருத் தரங்குகள்);

(ங) எதிர்கால சந்ததியினர், பிள்ளைகள் மற்றும் இளைஞர் களை போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாப் பதற்காக பல்வித வேலைத் திட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(ச) சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டங்கள் மற்றும் அது தொடர்பான அறிவூட்டல் பல்வேறு வேலைத் திட்டங் களை நடைமுறைப்படுத்தல்;

(ஞ) தனியார் நிறவனங்களையும் இணைத்துக்கொண்டு சமூகநல நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சிகளை மேற் கொள்ளல்;

(ட) குடும்பத் திட்டமிடல் பட்டறைகள், சுகாதார முகாம்கள் ஆகியவற்றை நடாத்துதல்;

(ண) விளையாட்டுக் கழகங்களுக்குத் தேவையான பொருட் களைப் பெற்றுக்கொடுத்தல், விளையாட்டுத் திடல்கள் கட்டிடத் தொகுதிகளை அபிவிருத்தி செய்தல் மேம் படுத்தல்;

(த) இளைஞர் கழகங்களுக்கு அத்தியாவசியமான தலைமைத்துவ மற்றும் ஆளுமைப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்;

(ந) தாவரவியல் பூந்தோட்டங்களுக்கு மற்றும் அவற்றை மேம்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும், தேவை யான விதைகள், கன்றுகளைப் பெற்றுக்கொடுத்தல், துறைசார் தொழில்நுட்பங்கள் மற்றும் அது தொடர் பான பயிற்சிகளை வழங்கல்;

(ப) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ஈடுபட்டுள்ள தன்னார்வத் தொண்டர்களுக்கு மற்றும் வேறு ஆட்களுக்கு புலமைப் பரிசில்கள் மூலம் அல்லது வேறு விதமான நிதி உதவிகளைச் செய்தல்;

(ம) நூலகங்களை அமைத்து அதனைக் கொண்டுநடாத்துதல், புத்தகங்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள், பருவ வெளியீடுகள் ஆகியவற்றிற்கு பங்களிப்புச் செய்தல் மற்றும் அவற்றை வெளியிடுதல் அதனோடு கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகொள்வதற்கு உசிதமாக கொள்ளும் வேறு அனைத்துச் சேவைகளையும் புரிதல்;

(ய) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்து கொள்வதற்காக கண்காட்சிகள், போதனைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், பட்டறைகள், வகுப்பறை விவாதங்கள், மாநாடுகள், சுற்றுலாக்கள், உல்லாசப் பயணங்கள் அல்லது வேறு ஏனையவற்றை ஒழுங்கு செய்தல், ஏற்பாடு செய்தல் மற்றும் மேற்கொள்ளல்;

(ர) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த வேறு கழகங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தல், நட்புறவைப் பேணுதல்;

(ல) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துகொள்வதற்காக இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் இடத்தில் மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டறைகள், கூட்டுக்கல்வி, போதனைகள் ஆகியவற்றிற்காக அனுசரணை வழங்கல் மற்றும் அவற்றைக் கொண்டு நடாத்துதல்; அத்துடன்

(வ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேலோங்கச் செய்வதற்காக மற்றும் முன்னேற்றுவதற்காக உசிதமென கூட்டுத்தாபனத்தினால் கருதப்படும் புத்தகங்கள், பருவ வெளியீடுகள், செய்தித்தாள்கள் ஆகியவற்றை அச்சிடுதல், வெளியிடுதல் மற்றும் அவற்றை விநியோகித்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களுட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்:-

(அ) நிதிகளைத் திரட்டுவதற்கும், காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைப் பெறுவதற்கும்;

(ஆ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தகையதுமான எம்முறையிலும் கொள்வதற்கும், வைத்திருப்பதற்கும், குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு எடுப்பதற்கும் அல்லது கொடுப்பதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், விற்பதற்கும் அல்லது வேறுவகையாகக் கையுதிர்ப்பதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொழிலுக்கு அவசியமான அல்லது வசதியான எவையேனும் கட்டிடங்களை அல்லது கட்டுவேலைகளை நிர்மாணிப்பதற்கும், பேணுவதற்கும், மாற்றுவதற்கும்;

(இ) நாணயமாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் ஏனைய கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குவதற்கும், வரைவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், கழிப்பனவு செய்வதற்கும், புறக்குறிப்பிடுவதற்கும், பேச்சுவார்த்தை மூலம் பெறுவதற்கும், வாங்குவதற்கும், விற்பதற்கும், வழங்குவதற்கும், வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கும், தொழிற்படுத்துவதற்கும், மூடிவிடுவதற்கும், பிணைப்பொறுப்புடனோ பிணைப்பொறுப்பின்றியோ பணம், கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைப் பேரவை தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய முறையில் குறிப்பீடு செய்வதற்கும்;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை எய்தப் பெறுவதற்காக எவரேனும் ஆளுடன், இலங்கையிலோ வெளிநாட்டிலோ கூட்டிணைக்கப்பெற்ற அல்லது கூட்டிணைக்கப் பெறாத ஆட்களின் குழுமத்துடன் அல்லது ஏதாவது அரசாங்கத் திணைக்களத்துடன், கூட்டுத்தாபனத்துடன், சபையுடன், மாகாண சபையுடன், உள்ளூரதிகாரசபையுடன் உடன்படிக்கைகளை அல்லது ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல்;

(ஊ) வெவ்வேறு வகுதியினவான உறுப்பாண்மைகளைப் பதிவுசெய்தல் தொடர்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களைத் தீர்மானிப்பதற்கும்; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும், தொழிலுக்கமர்த்துவதற்கும், பதவிவிலக்குவதற்கும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துவதற்கும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்கு செலுத்துவதற்கும்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, அதன் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்படும் முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். *கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடனடியாக நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்ற மன்றத்தின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

6. (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல், முகாமைச் சபையைத் தேர்ந்தெடுத்தல், கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்கள், முகவர்கள், அலுவலர்கள், சேவையாளர்கள் என்போரின் கடமைகளை நடாத்துதல், அலுவல்களைக் கொண்டுநடாத்துவதில் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைச் சபையினாலும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள், அத்துடன் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும் என்பவற்றுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்ட அதேபோன்ற ஒரு கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

7. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கொடை, விருப்பாவணம், நன்கொடை, அறுதி, சந்தாப்பணங்கள் அல்லது கட்டணங்கள் என்ற வகையில் பெறப்பட்ட எல்லாப் பணங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கவேண்டியவாறான ஒரு வங்கியிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளிலோ கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுகையில் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினை ஈடுசெய்வதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் நிதி மற்றும் ஆதனம் எந்த வகையிற் பெறப்பட்டாலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மாத்திரமே பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இலாபத்தின் பகுதியாகவோ மிகையூதியம் என்ற வகையாகவோ அல்லது வேறு எவ்வகையாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலும் அல்லது கைமாற்றப்படுதலும் ஆகாது.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.

8. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில், ''தகைமை பெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின்

உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தி னால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவு முள்ள கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

9. கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது தவிசாளர் மற்றும் செயலாளரின் முன்னிலையிலன்றி, எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத்தில் தங்களது பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்ப துடன், அவ்வாறு ஒப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாக ஒப்பமிடுவதிலிருந்தும் தனிவேறானதாதலும் வேண்டும்.

கூட்டுத்தாப னத்தின் இலச்சினை.

10. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக் களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்திகதி யன்று மன்றத்துக்கு வருமதியாகவுள்ள கடன்கள், உதவுதொகை கள், ஒப்பப்பணங்கள் ஆகியன இச்சட்டத்தின் நோக்கங்களுக் காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

மன்றத்தால் செலுத்தப்படற் பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப் படவுள்ளது மான கடன்கள்.

11. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதிவிருப்பாவணக் கையளிப்பின்மீது அல்லது வேறு வகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, ஒன்றில் பயன் பெறும் சொந்தக்காரராக அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையாக எடுக்கவும் வைத்திருக்கவும் கூட்டுத்தாப னம் ஆற்றலுடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அத்துடன் தொடர்புபட்ட கையாளுகைச் சாசனத்தின் ஏற்பாடுகளுக்கும் நிபந்தனைகளுக் கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற, வில்லங்கத்துக்குட்படுத்த அல்லது பொறுப்பிக் கவுள்ள முழுத்தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.

12. கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும் மற்றும் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்டதன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டனவும், ஏதேனும் வருமானத்தை அல்லது இலாபத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து விதிகளினால் தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டனவுமான வேறு ஏதேனும் நிறுவகத்திற்கு அல்லது வேறு எவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படுகையில் அல்லது அதற்கு நேர்முந்திய நிலையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனம்.

13. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும், கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக அல்லது வேறேதேனும் நோக்கத்துக்காக, கூட்டுத்தாபனத்துக்கு அவரினாற் செலுத்தப்படற்பாலதான வருடாந்த ஒப்பப்பணத் தொகையை விஞ்சுகின்ற ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்.

14. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவினதும் உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவர்களும், அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருகின்றவர்களும் தவிர்ந்த வேறேவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

15. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்